**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.181/2024**

| Deposition of Name | தமிழ்செல்வன் | Prosecution | LW-1 as PW1 |
|---|---|---|---|
| Father Name | அன்பழகன் | Defence | |
| Village | வைத்தீஸ்வரன்கோயில் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 37/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **22.07.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியல் வசித்து எலட்ரிசியனாக வேலை செய்து வருகிறேன். கடந்த 14.11.2023 ம் தேதி காலை 8.00 மணியளவில் நான் வேலை செல்வதற்காக சீர்காழி தென்பாதிக்கு சென்று கொண்டிருந்தேன் அந்த நேரம் மழை வந்ததால் நான் வேலைக்கு செல்லாமல் வீடு திரும்பி கொண்டிருந்தேன். அப்போது எதிரி என்னை கைகாண்பித்து ஏளனமாக சிரித்தார். நான் வண்டியை விட்டு இறங்கி ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டதற்கு குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று திட்டி அவர் வைத்திருந்த காப்பால் எனது மூக்கு தண்டில் குத்தினார். அதில் நான் மயங்கி வீழ்ந்து விட்டேன். நான் கண் விழித்து பார்த்த போது சீர்காழி GHயில் சிகிச்சையி ல் இருந்தேன். சிகிச்சையில் இருந்த என்னை வைத்தீஸ்வரன் கோயில் போலிசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்த்தில் தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும் எதிரிக்கும் என்ன முன் விரோதம் என்று எனக்கு தெரியாது. அதனை எதிரியிடம் தான் கேட்க வேண்டும்.

**குறுக்கு விசாரணை**

1 எதிரி எனக்கு நன்றாக தெரிந்தவரா என்றால் தெரிந்தவர்தான்.. அவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரியின் பெரியப்பா மகன் அன்பழகன் என்பவரை

தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அன்பழகனின் மனைவி சரிதா என்பவரை தெரியுமா என்றால் தெரியும். அவர் எனக்கு உறவினர்தான். சம்பவம் நடந்த தேதிக்கு நான்கு மாதம் முன்னர் நான் ஒரு நாள் இரவு நேரத்தில் மேற்படி சரிதாவை பார்ப்பதற்கு அவருடைய வீட்டிற்கு சென்றேன் என்றால் தவறு. நான் அப்படி செல்லவில்லை. அதைப் பார்த்த எதிரியின் மனைவி எதிரிடம் தகவல் சொல்ல அதனால் அன்றைய தினம் எனக்கும் எதிரிக்கும் சண்டை நடந்தது என்றால் தவறு. நடக்கவில்லை.

2. சம்பவ நாளன்று மழை பெய்ததா என்றால் பெய்தது. நான் என்னுடைய புகாரில் எதிரி என்னைப்பற்றி கிண்டலாக பேசியதாகவும் அதற்காக நான் அவரிடம் நியாயம் கேட்க சென்றதாகவும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் எதிரி எங்கு உட்கார்ந்து கொண்டிருந்ததாக நான் சொல்கிறேன் என்றால் மதகின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார். மழை பெய்த போதும் எதிரி அங்கு தான் அமர்ந்து இருந்தாரா என்றால் மழை தூரலில் அவர் அங்கு தான் அமர்ந்திருந்தார். நான் சொல்வது போல எதிரி என்னை ஆபாச வார்த்தை சொல்லி திட்டவில்லை என்றாலும் நான் தான் குடிபோதையில் அவரிடம் தகராறு செய்து அடித்துவிட்டு செல்களில் நிலை தடுமாறி வாகனத்தில் இருந்து கீழே விழுந்து எனக்கு அடிபட்டுவிட்டது என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் அலுவலகம் செல்லவில்லை என்றாலும் அன்றைய தினம் விடுமுறை தினம் என்றாலும் சரிதான்.

3. எதிரி அடித்ததால் நான் மயக்கம் அடைந்து விட்டதாக சொல்லும் நிலையில் ஆகவே அதற்கு பிறகு என்ன நடந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு போலீசார் வந்தபோதுதான் எனக்கு நடந்த விவரங்கள் பற்றி தெரிந்தது என்றால் சரிதான். போலீசாரிடம் நான் எடுத்த பூர்வமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வதை அவர்கள் எழுதிக் கொண்டார்கள். எதிரி என்னை இரும்பு காப்பால் குத்தியதாக சொல்லும் நிலையில் அந்த காப்பை அவர் அணிந்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆனால் இரும்பு காப்பை வைத்து தான் என்னை அவர் குத்தினார். நான் சொல்வது போல எதிரி என்னை தாக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. எதிரி என்னை தாக்கியதாக சொல்லப்படும் காப்பை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மருத்துவமனையில் விசாரித்த பிறகு போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் அதன் பிறகு விசாரிக்கவில்லை. எதிரிக்கும் இந்த வழக்கிருக்கும் சம்பந்தமில்லை என்றாலும் நான் எதிரியின் அண்ணியோடு தகாத உறவு வைத்திருந்ததால், எதிரி என்னை

கண்டித்ததால் அதனால் அவர் மீது விரோதம் கொண்டு இந்த பொய் புகாரை கொடுத்து பொய் சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள சாட்சிகள் கூட என்னை இது சம்பந்தமாக கண்டித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி மருத்துவமனையில் சேர்ந்து எதிரிக்கு எதிராக பொய் வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியில்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை.**